[2015 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

92—

புறவழிச் சாலை

*__6951__—**திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சியில் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சியில் புறவழிச் சாலை அமைக்கத் தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சுவது ஏதும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லையென்று நெஞ்சுரத்தில் வாழுகின்ற எங்கள் அம்மா! விண்முட்டவே வந்தாலும், விழி சிமிட்டா வீரத்தின் அடையாளமே! நெஞ்சில் பெருவுருவம் நேர்மைக்கு எந்நாளும் அஞ்சாது வாழுகின்ற எங்கள் அன்னையே! அமுதமொழி தமிழ் காக்க, அவதரித்த அதிசயமே! ஆச்சரியமும் பூச்சொரியும் ஆலயமே! அண்ணா தி.மு.க. என்னும் அன்பியல் இயக்கத்திற்கு காலம் தந்த கம்பீர ஓவியமே, எதற்காகவும், எவரிடமும், எப்பொழுதும் என் மக்கள் கையேந்தி

2015 மார்ச் 31]

நிற்காத காலத்தை உருவாக்குவேன் என சூளுரைத்துச் சுழல்கின்ற பேரறிவே! (மேசையைத் தட்டும் ஒலி) அலுங்காத, குலுங்காத சாலைகளை அழகுறவே அமைத்திட ரூ.8,200 கோடியை அள்ளித் தந்த எங்கள் அன்னையே! அம்மா நீங்கள் இருக்கும் திசை நோக்கி உங்கள் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சியில் புறவழிச் சாலையை அமைத்துக் கொடுக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்ற நல்ல பதிலை வழங்கிய மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மயிலாடுதுறை, கும்பகோணம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சி போன்ற முக்கிய பகுதிகளுக்குச் செல்லும் பேருந்துகள் அனைத்தும் வைத்தீஸ்வரன்கோவில் வழியே செல்வதாலும், வரலாற்றுச் சிறப்புமிக்க வைத்தியநாதசுவாமி, தையல்நாயகி மற்றும் அங்காரகன்-செவ்வாய் ஸ்தலம் இருப்பதாலும், இங்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்வதால் போக்குவரத்து நெரிசல் அதிகம் ஏற்படுகிறது. எனவே, மக்கள் நலன் கருதி, புறவழிச் சாலையை மிக விரைவாக அமைத்துத் தர வேண்டுமென்று பணிவோடு தங்கள் வாயிலாக மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகமெங்கும் உள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க படிப்படியாக புறவழிச் சாலைகள் அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என அறிவிப்பு செய்ததன் தொடர்ச்சியாக, கும்பகோணம், சீர்காழி, மாநில நெடுஞ்சாலை எண் 64-ஐ தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் II-ன்மூலம்

மேம்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதில் வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சிக்கு 4.90 கிலோ மீட்டர் நீள புறவழிச் சாலை அமைக்க தல ஆய்வு செய்யப்பட்டுள்ளது. முழுமையான திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சீர்காழி தொகுதி, வள்ளுவக்குடி முதல் கொண்டல் வரை செல்லும் நெடுஞ்சாலைத் துறை சாலை, சுமார் 2.2 கிலோ மீட்டர் தூரம் வரை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், மக்களின் நலன் கருதி உடனடியாக அந்தச் சாலையை சீரமைக்க மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சாலை பழுதடைந்த நிலையில் உள்ளது என்று இங்கு குறிப்பிட்டிருக்கின்றார்கள். நடப்பாண்டில் CRIDP திட்டத்தின் மூலமாக அந்தச் சாலை சீர்செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.